**சிலவ் பிலான்டேசன்ஸ் லிமிடட் - 2023**

-----------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

சிலவ் பிலான்டேசன்ஸ் லிமிடட்டின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளதுு. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவின் உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கம்பனி செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனிக்கு ஏனைய நிறுவனங்களுக்கு கடன் வழங்க சட்ட உரிமைகள் இல்லை என்றாலும், கம்பனியால் ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை, அல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், அரச வளங்கள் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் இறப்பர் உற்பத்தி ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றிற்கு ரூபா 105 மில்லியன் கூட்டுத்தொகையான கடன்கள் 2010 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. கம்பனியின் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில், 2014 ஆம் ஆண்டில் தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து வட்டி உட்பட வசூலிக்கப்பட வேண்டிய ரூபா 119.758 மில்லியன் தொகைக்காக நிதிக்கூற்றுக்களில் முழு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில், வட்டி உட்பட மொத்த வசூலிக்க முடியாத தொகை ரூபா 190.157 மில்லியன் ஆகும். | 2010 ஆம் ஆண்டு அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் அப்போதைய செயலாளரின் ஆலோசனையின் பேரில் திறைசேரியின் ஒப்புதலின் பேரில் சிலவ் பிலான்டேஷன் லிமிடட் கம்பனியால் இந்த அரச நிறுவனங்களுக்கு அவர்களின் அத்தியாவசிய நிதி நடவடிக்கைகளுக்காக நிதி வசதிகள்/கடன்களாக நிதியை வழங்கியது. கடன் வழங்கப்பட்ட ஆண்டு முதல், உரிய கடன் தொகையை வசூலிப்பது தொடர்பாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும், கம்பனியின் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின்படி, 2014 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இதற்கான முழு ஏற்பாடுகளையும் செய்யப்பட்டுள்ளது. | கம்பனியின் நோக்கங்களைப் பின்பற்றி கடன் தொகையும் வட்டியும் உடனடியாக வசூலிக்க தாமதிக்காது நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 302,606,407 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 513,881,001 ஆகும். அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 211,274,594 ஆன அதாவது 41 சதவீதமான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் தேங்காய், மர முந்திரிகை, விதைகள் மற்றும் தென்னங் கன்றுகள் போன்ற பயிர் உற்பத்திகளின் விற்பனைக் கிரயம் முறையே ரூபா 82 மில்லியன், ரூபா 41 மில்லியன் மற்றும் 16 மில்லியன் அதிகரித்தமை மற்றும் தேங்காய் விற்பனை வருமானம் ரூபா 126 மில்லியனால் குறைவடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

| விடயம் | 2023 | 2022 | விலகல் | வித்தியாசத்தின் சதவீதம் அதிகரிப்பு/ (குறைவு) % |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| வருமானம் | 899,693,759 | 975,106,419 | 75,412,660 | 8 |
| நிதி மற்றும் ஏனைய வருமானங்கள் | 341,545,704 | 332,435,788 | 9,109,916 | 3 |
| விற்பனைக் கிரயம் | 671,910,856 | 520,940,365 | 150,970,491 | 29 |
| நிர்வாகச் செலவினம் | 205,069,246 | 229,027,818 | 23,958,572 | 10 |
| நிதிச் செலவினம் | 61,652,953 | 43,693,022 | 17,959,931 | 41 |

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

- மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிதம் முறையே 4:1 மற்றும் 3:1 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டின் போது அந்த விகிதம் 4:1 மற்றும் 3:1 ஆக இருந்தன.

- மீளாய்வாண்டில் மொத்த இலாப விகிதம் 25 சதவீதமாக இருந்ததுடன் கடந்த ஆண்டின் போது அந்த விகிதமான 47 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்த தேறிய இலாப விகிதம் 22 சதவீத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

- மீளாய்வாண்டின் போது தேறிய இலாப விகிதம் 26 சதவீதமாக இருந்ததுடன் கடந்த ஆண்டின் போது அந்த விகிதமான 51 சதவீத்ததுடன் ஒப்பிடுகையில் தேறிய இலாப விகிதம் 25 சதவீத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தெரிவுப் பரிசோதனையின்படி, கணக்காய்வுத் திகதியில் 03 தோட்டங்களில் கூடுதல் பயிர்ச் செய்கைக்காக 839 ஏக்கர் நிலத்தை வெளி தரப்பினருக்கு குத்தகை அடிப்படையில் வழங்க பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும், எந்த காணி குத்தகைக்கு விடப்பட்டது மற்றும் யாருக்கு காணி குத்தகைக்கு விடப்பட்டது என்பது தொடர்பான கம்பனியின் கொள்கை மற்றும் வழிமுறைகள் நிதிக்கூற்றுக்களில் வெளியிடப்படவில்லை. | ஒரு தென்னந்தோப்பில் சுமார் 83% நிலம் பயன்படுத்தப்படாமல் வெற்றுக் காணியாக உள்ளதால், பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெற்ற பிறகு, பத்திரிக்கை விளம்பரங்கள் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அளவுகோல்களின்படி பெறப்பட்ட விண்ணப்பங்கள் கம்பனியால் நியமிக்கப்பட்ட குழுவுக்கு அனுப்பப்படுகின்றன. பொருத்தமான விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அவர்கள் வைப்புத்தொகைக்கு மற்றும் கட்டணமொன்றுக்கு உட்பட்டு, இந்த நிலங்கள் ஒப்பந்தத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி ஒப்பந்தம் கைச்சாத்திடுவதன் மூலம், விண்ணப்பதாரர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விடயத்திற்குரிய ஆதனம் தொடர்பில் உரித்தினை அல்லது பயன்பாட்டு உரித்தினை பெற மாட்டார்கள். | உப குத்தகைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிலம் மற்றும் நபர்கள் தொடர்பான கம்பனியின் குறிப்பிட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் உருவாக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளியிடப்பட வேண்டும். |
| (ஆ) | தேங்காய் விற்பனை அடிப்படையில ஒவ்வொரு வலயங்களுக்கும் உரியதாக, 2023 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 12,968,208 மற்றும் ரூபா 14,779,102 விற்பனை தரகு வழங்கப்பட்டிருந்தது. தேங்காய் ஏலத்திற்கு தேங்காய் விளைச்சலை முன்வைக்காது கம்பனியின் பதவியணிக்கு தரகு செலுத்துவதன் மூலம் நலன்களை அதிகரித்துக்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையொன்று அல்லது கொள்கையொன்று கணக்காய்வுக்கு முன்வைக்கப்படவில்லை. | இந்த தரகினை வழங்குவதன் மூலம், தோட்ட அதிகாரிகள் மற்றும் கள உத்தியோகத்தர்களிடமிருந்து அதிக உற்பத்திதிறன் கொண்ட சேவையைப் பெற முடியும், மேலும் வருமானம் அதிகமாக இருக்கும்போது, அதிக வருமானமும், அது குறையும் போது, குறைவான வருமானமும் கிடைக்கும். | தேங்காய் ஏலத்தில் இயலுமான அளவில் போட்டித் தன்மையுடன் விற்பனையை அதிகரித்துக்கொள்ள மற்றும் நல்ல விலையொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், கம்பனியின் உத்தியோகத்தர்களின் பணிப்பொறுப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சிலாபம் தோட்ட வலயத்தில் சினசோலா வயலில் இருந்து 5000 கன மீட்டர் மண்ணை அகற்றுவதற்கான ஒப்பந்தம் 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது, மேலும் 2021 ஆம் ஆண்டில் 1,212 கியூப்கள் வெட்டி ரூபா 1,030,200 வருமானம் ஈட்ட ஒப்பந்தம் செய்யப்பட்ட போதிலும்,அதனை இடைநடுவில் நிறுத்தி இருந்ததுடன், 2024 யூலை 19 ஆந் திகதி பௌதீக பரிசோதனை செய்யப்பட்ட திகதி வரையிலும் அந்த சுரங்கத்திள் பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. | சீனசோலை சுரங்கத்தை புனரமைப்பதற்கு உரியதாக 2021 ஆம் ஆண்டு 1,212 கனமீட்டர் மண் மட்டுமே அகற்றப்பட்டதால் ஏற்பட்ட சிக்கலான நிலமையின் அடிப்படையில் ஒப்பந்தப்படி நடுவர் மன்றம் நடத்தப்பட்டு ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது.<br><br>சுரங்கத்தின் பணியை முடிக்க பலமுறை விலைக்கேள்வி கோரப்பட்டும், இதுவரை விலைக்கேள்வியாளர் ஒருவர் முன்வந்திருக்கவில்லை.சீனுகல தோட்டத்தில் தற்போது அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இடம் பழமையான ஏரியாகும். இத்திட்டத்தின் மூலம் குவிந்துள்ள வண்டல் மண்ணுடன் ஓரளவிற்கு அகலப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த சிறிய குளத்தை புனரமைப்பு செய்வதன் மூலம் தோட்டத்தில் நிலத்தடி நீர்மட்டத்தை கட்டுப்படுத்த/உயர்த்துவதற்கு பெரிதும் உதவும். | சுரங்கம் அகழ்வதற்கு பொருத்தமான அனுபவம் வாய்ந்த மற்றும் நம்பகமான ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுத்து பயனுள்ள திட்டங்களைத் தயாரிக்க கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | முறையான அனுமதியின்றி நாளொன்றுக்கு ரூபா 900 ஊதியத்தின் அடிப்படையில 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் உட்பட 23 ஊழியர்களை வேலைக்கு அமர்த்த தோட்ட அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தனர். | 60 வருடங்கள் வரை சேவையாற்றிய ஓய்வுபெறும் போது ஊழியர்களை மீள வேலைக்கு அமர்த்துவதற்கான கோரிக்கையையும் கருத்திற் கொள்ளப்பட்டு, புதிய ஊழியர்களை இணைத்துக் கொள்வதில் உள்ள சிரமத்தையும் கருத்திற் கொள்ளப்பட்டு, தற்காலிக அடிப்படையில் தோட்டச் செலவுகளைக் குறைக்கும் நோக்கிலும் இந்த ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள தோட்ட அதிகாரியால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஏற்ப முறையான அதிகாரியின் ஒப்புதலின் பேரில் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சி நாளாந்த ஊதிய அடிப்படையில், ஒப்பந்த அடிப்படையில் மற்றும் கூட்டு ஒப்பந்தங்களின் அடிப்படையில் 141 பணியாளர்கள் கம்பனியின் பதவியணிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். | கூட்டு ஒப்பந்தத்தின்படி, எழுதுவினைஞர் சேவையில், களப்பணி, துணை/உதவி ஊழியர்கள், உழவு இயந்திர் சாரதிகள் ஆகியோர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், நாளாந்த சம்பள அடிப்படையில் இரு பிரதம எழுதுவினைஞர் பதவிகள், நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் பதவி ஆகியவற்றுக்கு ஒரு ஊழியர் மற்றும் உதவி தோட்ட கண்காணிப்பாளர் பதவியில் இருவர் பணிபுரிகின்றனர். | கம்பனியின் பணியாளர் தேவையின் அடிப்படையில், மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, முறையாக ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |